## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 91/2018 | Date : 16.02.2024 | RW1 |
|---|---|---|
| Name: ஜெயகுமார் | S/o.பெருமாள் | |
| Evidence Recorded Time: 1.35 P.M. to P.M. | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் மேற்படி நிறுவனத்தில் 14 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். என் நிறுவனத்தில் வாகனத்திற்கு கடன் கொடுத்து வசூல் செய்கிறோம் என்றால் சரிதான். நாங்கள் கடன் கொடுக்கும் போது எத்தனை ஆண்டுகள் கடனோ அதற்கு ஈடான காலத்திற்கு உரிய காப்பீடு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு செய்யவில்லை என்றால் வாடிக்கையாளர் சார்பாக நாங்கள் காப்பீடு செய்வோமா என்றால் அவர்களால் முடியவில்லை என்றால் நாங்கள் செய்வோம். அவ்வாறு காப்பீடு செய்ய வேண்டியது பற்றி வாடிக்கையாளர்களுக்க தெரிய படுத்துவோம் என்றால் சரிதான். TN 24 U 7026 என்ற வாகனம் எங்கள் நிறுவனத்தில் கடன் பெற்றார்களா என்றால் சரிதான். எந்த வருடம் என்றால் 2014ம் ஆண்டு கடன் பெற்றார்கள். கடன் எத்தனை ஆண்டுகள் என்றால் 36 மாதங்கள் ஆகும். கடன் வாங்கிய விவரத்தை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. கடன் கொடுத்த விவரத்தை ஆர்.சி புக்கில் ஹைபோதிகேசன் முத்திரையிடுவோம் என்றால் சரிதான். மேற்படி வண்டியை எங்கள் அனுமதி இல்லாமல் எந்த உரிமை மாற்றமும் செய்யமுடியாது என்றால் சரிதான். மேற்படி வாகனம் ஹைபோதிகேசனில் இருக்கும் போது இன்சூரன்ஸ் கட்டிய ஆவணத்தை ஒப்படைத்து இருக்கிறனோ என்றால் இல்லை. கடன் தொகை நிலுவையில் இருக்கும் போது 16.05.2017ம் தேதியில் விபத்து ஏற்பட்டுள்ளது அதற்கு உரிய காப்பீடு செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றாலும் அதை நாங்கள் செலுத்தாததினால் மேற்படி மனுதாரருக்கு உரிய இழப்பீடு கிடைக்கப்பெறவில்லை என்றும் அதன் படி எந்த இழப்பீடு நீதிமன்றம் வழங்க வேண்டும் என்று உள்ளதோ அதை நாங்கள் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. வாகனம் எங்களுடைய ஈட்டுடை அடமானத்தில் இருப்பதால் எங்களுக்கு அதில் பகரப்பொறுப்பு உள்ளது என்றால் சரியல்ல. ஆகவே அந்த கடமையில் இருந்து நாங்கள் தட்டிகழிக்க முடியாது என்றால் சரியல்ல. வாகனம்

**எந்த தேதியில் அடமானம் வைக்கப்பட்டது, எந்த தேதியில் மீட்கப்பட்டது என்ற விவரத்தை தாக்கல் செய்யவில்லை என்றும் விபத்துக்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்று சொல்லி எங்கள் பொறுப்பில் இருந்து விடுபட முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் அதற்கு கட்டுப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/- RW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.